DINAMALAR

PAGE NO: 03 DATE: 17.11.2023



■ புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் நடந்த தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் துணை தலைமை தேர்தல் அதிகாரி ஆதர்ஷ், வாக்காளர் பதிவு அதிகாரி சுரேஷ்ராஜ், ஸ்வீப் கண்காணிப்பு அதிகாரி கோவிந்தசாமி, கல்லூரி முதல்வர் லதா பார்த்திபன் பங்கேற்றனர்.

# தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி

**புதுச்சேரி, நவ. 17–**

புதுச்சேரி பல்லைக்கழக சமுதாயக் கல்லூரியில் புதிய வாக்காளர் சேர்த்தல் மற்றும் தேர்தல் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன், கண்காணிப்பு அதிகாரி லதாபார்த்திபன் முன்னிலை வகித்தனர். துணை தலைமை தேர்தல் அதிகாரி ஆதர்ஷ், வாக்காளர் பதிவு அதிகாரி சுரேஷ்ராஜ், ஸ்வீப் கண்காணிப்பு அதிகாரி கோவிந்தசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஓட்டுப் பதிவு அதிகாரி விவேகானந்தன் பேசியதாவது:

அடுத்தாண்டு ஜனவரி 1ம் தேதி அன்று 18 வயது முடிவடையும் அனைத்து மாணவர்களும் வாக்காளர் அடையாள அட்டை பெற தகுதியுடையவர்கள். புதுச்சேரியில் வரும் 25ம் தேதி மற்றும் 26ம் தேதி ஆகியே நாட்களில் தேர்தல் துறையின் சிறப்பு முகாம் நடக்கின்றது. அருகில் ஓட்டுச்சாவடி மையத்தினை மாணவர்கள், பெற்றோர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாணவர்ளுக்கான புதிய வாக்காளர் அடையாள அட்டைக்கு vha votee என்ற ஹெல்ப் லைன் செயலி மூலமாக அல்லது https://voters.eci.gov.in மூலமாக விண்ணப்பிக்கலாம்' என்றார். தொடர்ந்து படிவம்–6 பூர்த்தி செய்வது குறித்து செயல்விளக்கம் நடந்தது.

உதவி பேராசிரியர் பாரதி நன்றி கூறினார்.

DINAKARAN

PAGE NO: 14 DATE: 17.11.2023

# தேர்தல் சிறப்பு முகாம் விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, நவ. 17: புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி அறிவுறுத்தலின் பேரில் பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் மாணவர்களுக்கு இடையே புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் தேர்தல் சிறப்பு முகாம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

இதில் புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி முதல்வர் ராமகிருஷ்ணன், கண்காணிப்பு அதிகாரி லதா பார்த்திபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக துணை தலைமை தேர்தல் அதிகாரி ஆதர்ஷ், உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் வாக்குப்பதிவு அதிகாரி பேசுகையில், வருகிற 1.1.2024ம் அன்று 18 வயது முடிவடைந்த அனைத்து மாணவர்களும் வாக்காளர் அடையாள அட்டையை பெற தகுதியுடையவர்கள். எனவே வருகிற 25ம், 26ம் தேதிகளில் சிறப்பு முகாமானது அருகில் உள்ள வாக்குச்சாவடிகளில் நடைபெறும். இதனை மாணவர்களும், பெற்றோர்களும் பயன்படுத்தி கொள்ள வேண்டும். தொடர்ந்து மாணவர்களுக்கான புதிதாக வாக்காளர் அட்டையை ஆன்லைன் மூலம் மற்றும் https://voters.eci.gov.in. படிவம்-6 பதிவு செய்வது எப்படி என்று நேரடியாக அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் விளக்கப்பட்டது. மேலாண்மைத்துறை உதவி பேராசிரியர் பாரதி நன்றியுரை கூறினார்.



▶ புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் தேர்தல் சிறப்பு முகாம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.